**டிசம்பர் – 13**

# TNPSC துளிகள்

- தனியார் துறையில் தொகுதி சி மற்றும் தொகுதி டி பிரிவின் கீழ் உள்ள பணிகளில் கன்னட மொழி பேசும் மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக 1961 ஆம் ஆண்டின் கர்நாடகத் தொழில்துறை வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) விதிகளைத் திருத்த கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது.
    - சரோஜினி மஹிஷி அறிக்கையானது கன்னட மொழி பேசும் மக்களுக்கு தனியார் துறைப் பணிகளில் முன்னுரிமை வழங்கப் பரிந்துரைத்துள்ளது.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது ஹைதராபாத் விமான நிலையத்தில் வாகன நிறுத்தப் பயன்பாடுகளுக்கு ஃபாஸ்டேக்குகளைப் (FASTags) பயன்படுத்துவதற்காக ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. “ஃபாஸ்டேக் 2.0” எனக் கருதப்படும் இது வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டண வசூலிப்பு, எரிபொருள் கட்டணம் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.
- எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் இந்தியாவில் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக தேசிய சிறு தொழிற்சாலைகள் கழகம் (National Small Industries Corporation - NSIC) மற்றும் சவுதி அரம்கோ (சவுதி அரேபிய எண்ணெய் நிறுவனம்) ஆகியவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது.
- ஆயுதங்கள் மற்றும் இராணுவ சேவைகளை விற்பனை செய்யும் அமெரிக்க நிறுவனங்கள் உலகில் உள்ள ஆயுதங்களை விற்பனை செய்யும் மிகப்பெரிய 100 நிறுவனங்களில் முதல் 5 இடங்களில் இடம் பிடித்துள்ளன என்று ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது (SIPRI - Stockholm International Peace Research Institute) அறிக்கை அளித்துள்ளது.
- முழுவதும் மின்சாரத்தால் இயங்கக் கூடிய உலகின் முதலாவது வணிக ரீதியான விமானமானது கனடாவின் வான்கூவரில் இருந்து சோதனை ஓட்டத்தை மேற்கொண்டது.
    - இந்த மின்சாரத்தால் இயங்கும் விமானமானது ஹார்பர் விமான நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்திய அரசியலமைப்பின் வரலாறு குறித்த டிஜிட்டல் கண்காட்சி


- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 9 அன்று ‘இந்திய அரசியலமைப்பின் வரலாறு குறித்த டிஜிட்டல் கண்காட்சியானது புது தில்லியில் திறந்து வைக்கப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு சபையின் முதலாவது அமர்வானது 1946 ஆம் ஆண்டில் இந்த நாளில் நடத்தப்பட்டதால், இது ஒரு முக்கியமான தினமாகக் கருதப்படுகின்றது.
- நடப்பு ஆண்டான 2019 ஆம் ஆண்டானது இந்திய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதன் 70வது ஆண்டைக் குறிக்கின்றது.
- இது பாராளுமன்ற அருங்காட்சியகம், மக்களவை செயலகத்தின் காப்பகங்கள் மற்றும் அவுட்ரீச் & தகவல் தொடர்பு அமைப்பு (Bureau of Outreach and Communication (BOC)) ஆகியவற்றுடன் இணைந்து மத்தியப் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## இந்தியாவின் முதலாவது பசு கிசான் கடன் அட்டைகள்

- இந்தியாவில் முதலாவது பசு கிசான் கடன் அட்டைகள் (கால்நடை வளர்ப்பு கடன் அட்டை) ஹரியானா மாநிலத்தில் விநியோகிக்கப்பட்டன.
- கால்நடை உரிமையாளர்களுக்கு உதவுவதற்கு கால்நடை வளர்ப்பு மற்றும் வேளாண் வணிகத்தை மேம்படுத்துவதற்காக இந்தக் கடன் அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## இந்தியக் கலாச்சார இணையதளம்

- மத்தியக் கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் இந்தியக் கலாச்சார இணைய தளத்தை புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- நாட்டின் பல்வேறு பாரம்பரியங்களைப் பற்றி இந்தியக் குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த இணைய தளத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இது ஆங்கிலம் மற்றும் இந்தி இரண்டு மொழிகளிலும் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த இணையதளமானது மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்தினால் முன்மொழியப்பட்டு, மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது. இதில் உள்ள தரவுகள் இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.




## AGNIi முன்னெடுப்பு

- டுபோன்ட் டி நெமோர்ஸ் என்ற (பொதுவாக டுபோன்ட் என அழைக்கப்படுகின்றது) ஒரு அமெரிக்க நிறுவனமானது இந்திய அரசின் AGNIi (புதிய இந்தியாவின் கண்டுபிடிப்புகளின் விரைவான வளர்ச்சி) முன்னெடுப்புடன் இணைந்துள்ளது.
- AGNIi என்பது இந்திய அரசின் நாடு தழுவிய ஒரு முயற்சியாகும்.
- இது தொழிற் துறை முழுவதும் கண்டுபிடிப்பாளர்களை இணைப்பதன் மூலம் புத்தாக்கத்தின் சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக, தொடர்ச்சியான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதையும் புதுமையான தீர்வுகளை வணிகமயமாக்குவதற்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- AGNIi என்பது ஒரு நிதி வழங்கும் நிறுவனம் அல்ல. மேலும் இது கண்டுபிடிப்பாளர்களுக்கு நேரடியான நிதியுவியை அளிக்காது.

## DefExpo 2020

- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒரு தலைமை நிகழ்வான 2020 ஆம் ஆண்டின் DefExpoன் (பாதுகாப்புத் துறைக் கண்காட்சி) 11வது பதிப்பானது உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் நடத்தப்பட இருக்கின்றது.
- ❖ DefExpo 2020ன் கருப்பொருள், "இந்தியா - வளர்ந்து வரும் பாதுகாப்பு பொருள்களின் உற்பத்தி மையம் மற்றும் பாதுகாப்புத் துறையில் டிஜிட்டல் மாற்றம்" என்பதாகும்.




## இந்தியாவில் "கட்டாயம் பார்க்க வேண்டிய நினைவுச் சின்னங்கள்"

- ❖ இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனமானது (Archaeological Survey of India - ASI) நாட்டில் 138 நினைவுச் சின்னங்களை 'கட்டாயம் பார்க்க வேண்டிய நினைவுச் சின்னங்கள்' என்று அடையாளம் கண்டுள்ளது.
- ❖ இந்தியாவில் 38 உலகப் பாரம்பரிய தளங்கள் உள்ளன. இதில் நினைவுச் சின்னங்கள், கட்டிடங்கள் மற்றும் குகைகள் உட்பட 22 கலாச்சாரத் தளங்கள் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.




## 7வது இந்தியத் திறன்கள் அறிக்கை 2020

- ❖ 2019-20 ஆம் ஆண்டிற்கான இந்தியத் திறன்கள் அறிக்கை - 2020ன் 7வது பதிப்பானது வெளியிடப்பட்டுள்ளது.

- இந்த அறிக்கையில் வேலைவாய்ப்பின் அடிப்படையில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த அறிக்கையில் இந்த மாநிலத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளன.
- இந்தியத் திறன்களின் அறிக்கையானது பின்வருவனவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்:
  - வீ பாக்ஸ் (உலகளாவியத் திறன் - மதிப்பீட்டு நிறுவனம்),
  - ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து இந்திய தொழில் துறைக் கூட்டமைப்பு மற்றும் "PEOPLE STRONG" என்ற அமைப்பு,
  - AICTE (அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம்) மற்றும்
  - AIU (இந்தியப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு).

# சர்வதேசச் செய்திகள்

## பயோ ஆசியா 2020 இன் 17வது பதிப்பு

- தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நடைபெறவிருக்கும் பயோ ஆசியா 2020ன் 17வது பதிப்பில் சுவிட்சர்லாந்து நாடு பங்காளர் நாடாக கலந்து கொள்ள இருக்கின்றது.
- இந்த நிகழ்வின் கருப்பொருள், "நாளைய தினத்திற்கான (எதிர் காலம்) இன்றைய தினம்" என்பதாகும்.
- 2018 ஆம் ஆண்டில், இந்தியாவானது சுவிட்சர்லாந்தின் 8வது பெரிய வர்த்தகப் பங்காளர் நாடாக இருந்தது. இந்த இரு நாடுகளின் மொத்த வர்த்தகத்தின் மதிப்பு 19.7 பில்லியன் டாலர் ஆகும்.




## "கடலோரக் கப்பல் போக்குவரத்து ஒப்பந்தத்தின் கீழ் தொடர்புத் துறைமுகங்கள்

- இந்தியா மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகளுக்கு இடையிலான "கடலோரக் கப்பல் போக்குவரத்து ஒப்பந்தத்தின்" கீழ் மோங்லா மற்றும் சட்டோகிராம் (இரண்டும் வங்க தேசத்தில் உள்ளன) துறைமுகங்கள் தொடர்புத் துறைமுகங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன.
- மோங்லா துறைமுகம் PIWT & Tன் (உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வர்த்தகத்திற்கான நெறிமுறை - Protocol on Inland Water Transit and Trade) கீழ் தொடர்புத் துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டோகிராம் துறைமுகம் ஆனது PIWT & T ன் ஒரு பகுதியாக இல்லை.

- இந்தியாவிற்கும் வங்க தேசத்திற்கும் இடையிலான PIWT & Tன் கீழ், இந்தியா - வங்க தேச நெறிமுறை (Indo-Bangladesh Protocol - IBP) வழியில் இரு நாடுகளிலும் தற்போது 6 துறைமுகங்கள் உள்ளன.
- சட்டோகிராம் என்பது வங்க தேசத்தின் சிட்டகாங் துறைமுகத்தின் மற்றொரு பெயராகும்.

# மாநிலச் செய்திகள்

## ஒடிசாவில் பைக்கா நினைவகம்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சமீபத்தில் 1817 ஆம் ஆண்டில் நடைபெற்ற பைக்கா கிளர்ச்சிக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்.
- பைக்கா நினைவகமானது பைக்கா கிளர்ச்சியின் 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும்.
- இது ஒடிசாவின் குர்தா மாவட்டத்தில் உள்ள பருனேய் மலையில் அமைய இருக்கின்றது.

***பைக்கா கிளர்ச்சி பற்றி***

- குர்தாவின் கஜபதி மன்னரின் (பூரிக்கு அருகிலுள்ள ஒரு இராஜ்ஜியம்) போராளி இராணுவத்தின் பரம்பரைத் தலைவரான பாக்ஸி ஜகபந்து என்பவரின் தலைமையில் பைக்கா இன மக்கள் 1817 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- இது 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற சிப்பாய் கலகத்திற்கு முந்தைய, காலனித்துவ ஆட்சிக்கு எதிரான ஒரு எழுச்சியாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தீபாவளி - பவர் ஆஃப் ஒன் விருதுகள்

- ஐக்கிய நாடுகள் சபையானது பாதுகாப்பான மற்றும் அமைதியான உலகத்திற்காக 'தீபாவளி - பவர் ஆஃப் ஒன்' என்ற விருதை முக்கியமான நான்கு இராஜதந்திர அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது.
- தற்பொழுது 'ராஜதந்திர உறவுகளின் ஆஸ்கார்' என்று அழைக்கப்படும் இந்த விருதுகள் அமெரிக்க தீபாவளிக் கூட்டமைப்பினால் 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட இராஜதந்திர அதிகாரிகள் பின்வருமாறு:
    - கைரத் அப்த்ரக்மனோவ் (கஜகஸ்தான்)
    - நிக்கோலஸ் எமிலியோ (சைப்ரஸ்)
    - ஃபிரான்டிசெக் ருசிகா (ஸ்லோவேக்கியா)
    - வோலோடிமிர் யெல்சென்கோ (உக்ரைன்).

## உலக வாழ்விட விருது - 2019

- ஒடிசாவின் வாழக்கூடிய வாழ்விடத் திட்டம் (OLHM - Odisha Liveable Habitat Mission) என்று அழைக்கப்படும் "ஜகா" என்ற திட்டத்திற்காக 'உலக வாழ்விட விருதை' ஒடிசா மாநிலம் வென்றுள்ளது.


- இது சேரிகளில் வாழும் மில்லியன் கணக்கான நகர்ப்புற ஏழை மக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட ஒரு சேரி நில உரிமைத் திட்டமாகும்.
- இந்த விருதானது உலகெங்கிலும் உள்ள புதுமையான வீட்டுவசதித் திட்டங்களை அங்கீகரிப்பதற்காக ஆண்டுதோறும் இங்கிலாந்தில் (ஐக்கிய ராஜ்ஜியம்) உள்ள "வேர்ல்ட் ஹபிடட்" என்ற அமைப்பினால் வழங்கப்படுகின்றது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச மலைகள் தினம் - டிசம்பர் 11

- இந்தத் தினமானது 2003 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.
- இது விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மலைகளில் வாழும் மக்கள், சூழல் அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் "இளைஞர்களுக்காக மலைகளின் முக்கியத்துவம்" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2002 ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகளின் சர்வதேச மலைகள் ஆண்டாக அறிவித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப் படி, உலக மக்கள் தொகையில் 15 சதவிகித மக்கள் மலைகளில் வாழ்கின்றனர். உலகில் உள்ள மொத்த விலங்குகள் மற்றும் தாவரங்களில் கால் பகுதி இனங்கள் மலைகளில் வாழ்கின்றன என்று இந்த அமைப்பு கூறுகின்றது.




## யுனிசெஃப் – உருவாக்க தினம் - டிசம்பர் 11

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று (ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகளின் அவசர நிதியம் / United Nations International Children's Emergency Fund - UNICEF) யுனிசெஃப் அமைப்பை உருவாக்கியது.
- 1953 ஆம் ஆண்டில், யுனிசெஃப் அமைப்பானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிரந்தர அமைப்பாக மாறியது.
- இது வளரும் நாடுகளில் உள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் ஆகியோருக்கு மனிதாபிமான மற்றும் வளர்ச்சிக்கான உதவிகளை வழங்குகின்றது.
- இதன் தலைமையகமானது நியூயார்க் நகரில் அமைந்துள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் மேம்பாட்டுக் குழு மற்றும் அதன் செயற்குழுவின் உறுப்பு அமைப்புகளில் ஒன்றாக விளங்குகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★